கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

## வகுப்பு - 3

# சூழ்நிலை இயல்

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
(SCERT)
கேரளம்.
2022

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரியவந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி சிறுநூல் ஒன்றை உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச்செயல்பாட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் தன்னம்பிக்கையோடு முன்னேறட்டும். வாழ்த்துகள்.

**இயக்குநர்**

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

# வகுப்பு 3 - சூழ்நிலையியல்

1. அம்மு தனது தோழியிடமிருந்து வாங்கிய ரோஜாச்செடி பூ பூத்தபோது ஊதா நிறத்தில் இருந்தது. அம்முவின் தோட்டத்தில் மூன்று நிற பூக்களுள்ள ரோஜாச் செடிகள் உள்ளன. ஒரே இனத்திலுள்ள செடிகளில் வெவ்வேறு நிறமுள்ள பூக்கள் இருந்தன. அம்மு மகிழ்ந்தாள். இதுபோன்று உங்கள் வீட்டுத் தோட்டத்தில் உள்ளதா? உண்டெனில், அவற்றில் ஒரே இனத்திலுள்ள செடிகளில் வெவ்வேறு நிறமுள்ள பூக்கள் எவையென எழுதுங்கள். நீங்கள் பார்த்த நிறங்களையும் எழுதுங்கள்.



| பூவின் பெயர் | நிறங்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |



2. அம்மு, அப்பு, பாட்டி மூவரும் கண்ணைக் கட்டி விளையாடுகின்றனர். அம்மு தனது கண்ணைக் கட்டி 20 இலைகளை தொட்டுப்பார்த்து அவை எந்த தாவரங்களின் இலை என கண்டறிந்தாள். நாமும் விளையாடுவோமா? வீட்டிலுள்ளவர்களின் உதவியுடன் கண்ணைக்கட்டி இலைகளைக் கண்டறிய முயலுங்கள். எத்தனை இலைகளைக் கண்டுபிடித்தீர்கள்? கண்டுபிடித்த இலைகளின் பெயர்களை எழுதவும். கண்டுபிடிக்க நீங்கள் பயன்படுத்திய வழிமுறை என்ன?

3. அம்மு தனது பூந்தோட்டத்தில் புதிய செடிகளை நடுகிறாள். நண்பர்களிடமிருந்து விதை, தண்டு, கிழங்கு போன்றவைகளை வாங்கி நட்டாள். அம்மு எந்தெந்த செடிகளை நட்டு வைத்திருப்பாள்?



| செடியின் பெயர் | விதை | கிழங்கு | தண்டு |
|---|---|---|---|
| ரோஜா | | | ✓ |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |



4. வீட்டு முற்றத்திலுள்ள பூந்தோட்டத்தில் உள்ள மணமில்லாததும் மணமுள்ளதுமான பூக்களின் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

| மணமில்லாதது | மணமுள்ளது |
|---|---|
| | |
| | |
| | |

5. வீட்டில் வளர்க்கும் ஏதாவது ஒரு விலங்கின் உணவு முறையை உற்றுநோக்கி எழுதுங்கள்.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

6. கீழே தரப்பட்டுள்ளவற்றில் உணவுக்காக பயன்படுத்துவதற்கு நேராக சரி (✓) அடையாளமிடவும்

| | | |
|---|---|---|
| சேம்பு | சேனை | தக்காளி |
| மரவள்ளிக்கிழங்கு | வாழை | வெண்டை |
| ரோஜா | கொய்யா | உருளைக்கிழங்கு |
| தேக்கு | நெல்லி | முருங்கை |

7. மேலே கொடுக்கப்பட்டுள்ள தாவரங்களில் உணவுக்காக எந்தெந்த பகுதிகளைப் பயன்படுத்தலாம்?

| செடியின் பெயர் | காய் | கிழங்கு | தண்டு | இலை | பூ |
|---|---|---|---|---|---|
| முருங்கை | ✓ | | | ✓ | ✓ |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

8

 ☐

.........................................

 ☐

.........................................

 ☐

.........................................

 ☐

.........................................

 ☐

.........................................

 ☐

.........................................

மேலேகொடுக்கப்பட்டுள்ள படத்தில் பல்லும், நகமும் உபயோகித்து இரையைப் பிடிக்கும் விலங்குகளைக் கண்டறிந்து அவற்றிற்கு நேராக சரி (✓) அடையாளமிடவும். படத்தின் அடியில் பெயர் எழுதவும்.

இதைப்போன்ற சிறப்புகள் உள்ள வேறு விலங்குகள் எவையெல்லாம் உங்களுக்குத் தெரியும். பெயர்களையும் எழுதுங்கள்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

9. பள்ளியிலும், வீட்டிலும் பயன்படுத்தும் தண்ணீர் உறைவிடங்களின் பெயர்களை எழுதுங்கள்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

நண்பர்களே, தினந்தோறும் உங்கள் வீட்டில் எவ்வளவு தண்ணீர் பயன்படுத்துகிறீர்கள்?

அதில் குடிப்பதற்கு பயன்படுத்ததும் தண்ணீர் எவ்வளவு? பிற தேவைகளுக்கு பயன்படுத்ததும் தண்ணீர் எவ்வளவு?

| **குடிப்பதற்கு** | **பிற தேவைகளுக்கு** |
|---|---|
| | |

10.



முள்ளம் பன்றி தனது உடலிலுள்ள முள்ளை எதிரிக்கு நேராக சிலிர்த்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது.

இதுபோன்று கீழே கொடுக்கப்பட்டுள்ள விலங்குகள் எதிரிகளிடமிருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்கின்றன என்பதை இணைத்துக் காட்டுக.



உடலின் நிறத்தை மாற்றுகிறது.



தொடும்போது சுருண்டு விடுகிறது



தண்ணீரில் மை கலக்கி விடுகிறது.



தொடும்போது சுருண்டு விடுகிறது.



வாலைத் துண்டாக்கி செல்கிறது.